இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 10-01-2025

# பல்கலைக் கழகங்களைச் சிதைக்கச் சதி!

**பள்ளிக் கல்வியைச் சிதைக்க புதிய கல்விக் கொள்கை!**

**கல்லூரிக் கல்வியைச் சிதைக்க பல்கலைக் கழகங்களுக்கான முழு அதிகாரம் ஆளுநர்களுக்கு!**

**- இதுதான் ஒன்றிய பா.ஜ.க. அரசு கல்வியை வளர்க்க நினைக்கும் லட்சணம் ஆகும்.**

பல்கலைக் கழகத் துணைவேந்தரை தேர்வு செய்ய அமைக்கப்படும் தேர்வுக் குழுவை ஆளுநரே தீர்மானிப்பார் என்று யு.ஜி.சி. எனப்படும் பல்கலைக் கழக மானியக் குழு விதிமுறை வகுத்துள்ளது. இதனை ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவித்திருக்கிறார்.

பல்கலைக் கழகத் துணைவேந்தர்களை நியமிப்பதில் மாநில ஆளுநர்களுக்கு அதிக அதிகாரங்களைத் தூக்கித் தந்துள்ளார்கள். துணைவேந்தர்கள் நியமனத்துக்கான தேடுதல் குழுவை ஆளுநரே நியமித்துக் கொள்ளலாம். அதாவது யாரை துணைவேந்தர் ஆக்க வேண்டும் என்று ஆளுநர் நினைக்கிறாரோ அவரை நியமித்துக் கொள்ளலாம்.

இப்போது இருக்கும் வழிமுறை என்ன என்றால்..

இந்த தேடுதல் குழுவில் மூவர் இருப்பார்கள். ஒருவரை ஆளுநர் நியமிக்கலாம். ஒருவரை மாநில அரசு நியமிக்கலாம். ஒருவரை குறிப்பிட்ட அந்த பல்கலைக் கழகம் நியமிக்கலாம். இனி இந்த தேடுதல் குழுவில் மாநில அரசு யாரையும் நியமிக்க முடியாது.

அதேபோல், மாநில ஆளுநரின் பதவிக்காலத்தையும் மூன்று ஆண்டில் இருந்து ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டித்து விட்டார்கள். கவைக்கு உதவாத ஒருவரைப் போட்டு ஐந்தாண்டுகளுக்குள் ஒரு பல்கலைக் கழகத்தை மொத்தமாகச் சிதைக்கும் சதிச் செயலின் தொடக்கம்தான் இது.

**தமிழ்நாட்டின் ஆளுநராக ஆர்.என்.ரவி வந்தது முதல், தன்னை உண்மையான வேந்தராகவே நினைத்துக் கொண்டு செயல்பட்டு வருகிறார். தன்னை ஏதோ கல்வி மேதை போல நினைத்துக் கொண்டு பல்கலைக்கழகத் துணைவேந்தர்களுக்கு வகுப்பெடுத்துக் கொண்டிருந்தார். அதேநேரத்தில் முறைகேடுகளைச் செய்யும் துணைவேந்தர்களை முழுமையாகக் காப்பாற்றுபவராகவும் இவர்தான் இருக்கிறார். அண்ணா பல்கலைக் கழகத்தில் நடந்த சம்பவத்துக்கு பொறுப்பேற்க வேண்டியவர், அதனை நிர்வகிப்பதாக நடித்து வரும் ஆளுநர் தானே? அதனை மறைக்க அரைமணி நேரம் பல்கலைக் கழக வளாகத்துக்கு வந்து சுற்றிப் பார்த்து விட்டு பதுங்கி விட்டார் ஆர்.என்.ரவி. சும்மா பந்தா பண்ணினால் பல்கலைக் கழகங்கள் பாதுகாக்கப்பட்டு விடுமா?**

துணைவேந்தரைத் தேர்ந்தெடுக்கும் தேர்வுக் குழுவில் யு.ஜி.சி. பரிந்துரை செய்யும் உறுப்பினர்களை ஆளுநர் நியமிக்கும் செயலையும் ஆளுநர் ரவிதான் செய்தார். பல்கலைக் கழகங்களின் செயல்பாடுகளை முடக்கவே இதனைச் செய்தார்.

ஒவ்வொரு ஆண்டும் மாநில பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் நிதியினை ஒன்றிய அரசு நிறுத்தியும் குறைத்தும் வருகிறது. இதனால் பல பல்கலைக்கழகங்களின் நிதி நிலைமை மிகுந்த சிரமத்திற்கு ஆளாக்கப்பட்டுள்ளது. இதனை பல்கலைக்கழகத்தின் வேந்தர் என்ற பொறுப்பில் உள்ள ஆளுநர் தட்டிக் கேட்பதில்லை. இவரல்லவா நிதிகளைப் பெற்றுத் தர வேண்டும். அதனைச் செய்யவில்லை.

நிதி ஒதுக்கீடு செய்யாமல் பல்கலைக்கழகங்களை முடக்கும் ஒன்றிய அரசின் செயல்பாட்டை மறைக்கவே - பல்கலைக்கழக நிர்வாகத்தில் ஆளுநர் இப்படி அரசியல் செய்தார்.

**“பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் நெறிமுறைகள் பரிந்துரை மட்டுமே. அதை அப்படியே கட்டாயம் மாநில அரசுகள் பின்பற்ற வேண்டும் என்று மாநில அரசுகளை நிர்ப்பந்தப்படுத்துவது மக்களால் தேர்ந்தெடுத்த அரசுக்கு அரசியல் உள்நோக்கோடு கொடுக்கும் நெருக்கடி ஆகும். இதனை ஆளுநர் தவிர்த்து பல்கலைக்கழகங்கள் கல்விப்பணியாற்ற வழிவிட வேண்டும். பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகளில் தேவையற்ற வகையில் மூக்கை நுழைப்பது போன்ற ஆளுநரின் நடவடிக்கைகளுக்கு நீதிமன்றம் ஏற்கனவே பலமுறை குட்டுவைத்தும் தனது செய்கையினை மாற்றிக்கொள்ளவில்லை என்பது கவலைக்குரியது மட்டுமல்ல; ஆளுநரின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதும் ஆகும். இவ்வாறு ஆளுநர் தொடர்ந்து தலையிட்டு வருவதால் பல பல்கலைக்கழகங்களின் நிர்வாகம் கடுமையாக பாதிப்படைந்துள்ளது”** என்று உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அறிக்கை விடுத்தார். பல்கலைக் கழகங்களைச் செயல்படவிடாமல் தடுக்கவே ஆளுநர் ரவி இதனைச் செய்தார். இதனை அப்படியே செய்யத் தொடங்கி விட்டது ஒன்றிய அரசு.

துணைவேந்தர் தேடுதல் குழு தொடர்பாக மாநிலப் பல்கலைக் கழகங்கள் அனைத்துக்கும் பொதுவான விதி இல்லை. அப்படி இருக்கும் போது யு.ஜி.சி. பிரதிநிதியைச் சேர்க்க வேண்டும் என்பதே தவறானது. மாநில உரிமைகளில் தலையிடுவது ஆகும் என்று சொல்லி வந்தோம். இப்போது மாநிலங்களுக்கான முழு உரிமையையும் பறிக்கப் போகிறார்கள்.

அந்தந்த மாநிலப் பல்கலைக் கழகங்களின் அடிப்படையில் தான் துணைவேந்தர் தேடுதல் குழு அமைக்கப்பட வேண்டும் என்று 2013 ஆம் ஆண்டு பல்கலைக் கழக மானியக் குழு விதிமுறை வகுத்தது. இது 2018 ஆம் ஆண்டும் உறுதி செய்யப்பட்டது. இதன்படி அந்தந்த பல்கலைக் கழகங்களின் சட்டப்படி தேடுதல் குழு அமைக்கப்பட்டது. யு.ஜி.சி. பிரதிநிதி இருக்க வேண்டும் என்று அப்போது யாரும் சொல்லவில்லை. 2021 ஆம் ஆண்டைய யு.ஜி.சி.யின் அரசாணையும், அந்தந்த பல்கலைக் கழக சட்டப்படி தேடுதல் குழு என்றுதான் சொல்லப்பட்டது. திடீரென ஆளுநர்களுக்கு அதிகாரங்களை வழங்குவது திட்டமிட்டு மாநில அரசுகளை பலவீனமாக்கும் செயலாக மட்டுமே கருத வேண்டி உள்ளது.

ஒரு உத்தரவைப் போட்டுவிட்டு, இதனை அமல்படுத்தாத கல்வி நிறுவனங்கள் யு.ஜி.சி. திட்டங்களில் பங்கேற்க முடியாது என்பதும் பட்டங்களை வழங்க முடியாது என்பது பகிரங்கமான மிரட்டல் ஆகும்.

உயர்கல்வி தொடர்பான இது போன்ற சட்டமானது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஒன்றியப் பட்டியலில் இல்லை. பொதுப்பட்டியலில்தான் இருக்கிறது. பொதுப்பட்டியலில் இருக்கும் ஒரு சட்டத்தில் தன்னிச்சையாக பா.ஜ.க. அரசு முடிவெடுப்பது எதேச்சதிகாரமானது.

**மாநிலங்களை மட்டுமல்ல, கல்வியையே சிதைக்க நினைக்கிறார்கள். ‘சூத்திரனுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வியைக் கொடுக்காதே’ என்ற நிலையை உருவாக்கவே புதிய கல்விக் கொள்கை, நீட் தேர்வுகள், யு.ஜி.சி. விதிமுறைகள் கொண்டு வரப்படுகின்றன என்பதே உண்மை.**





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் இரண்டு நாட்கள் நடத்தப்படும் “Umagine TN” தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டை தொடங்கி வைத்து, அங்கு அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், தகவல் தொடர்பு மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், மின்னாளுமை இயக்குனர் மற்றும் தமிழ்நாடு மின்னாளுமை முகமை தலைமை நிர்வாக அலுவலர் எம்.கோவிந்த ராவ், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) திருமதி பி.ரமண சரஸ்வதி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) மரு. இரா. வைத்திநாதன், இந்திய தொழில் கூட்டமைப்பின் தென் மண்டல தலைவர் திருமதி நந்தினி, HCL Tech நிறுவன முதன்மை செயல் அலுவலர் விஜயகுமார், HP இந்தியா நிறுவனத் துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி. இப்ஸிதா தாஸ் குப்தா, இந்திய மென் பொருள் தொழில்நுட்ப பூங்கா இயக்குநர் அரவிந்த குமார், பல்வேறு நாடுகளின் தூதரக அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டி 1 கோடியே 14 லட்சத்து 61 ஆயிரம் மகளிருக்கும்

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகை இன்றே வழங்கப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜன. 10- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழர் திருநாளான பொங்கல் திருநாளையொட்டி 1 கோடியே 14 இலட்சத்து 61 ஆயிரம் மகளிருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை இன்றே (9.1.2025) வழங்கிட உத்தரவு பிறப்பித்துள்ளார் என அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.**

தமிழ்நாட்டு மக்களிடம் குறிப்பாக பெண்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள தகுதிவாய்ந்த 1 கோடியே 14 இலட்சத்து 61 ஆயிரம் பெண்களுக்கு ஒவ்வொரு மாதமும் அவரவர் வங்கி கணக்குகளில் ரூ.1000 வரவு வைக்கப்படுகிறது.

எதிர்வரும் தமிழர் திருநாளான பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாடிடும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை 1000 ரூபாயினை முன்கூட்டியே வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (9.1.2025) உத்தரவிட்டுள்ளார்கள். இந்த உத்தரவின் மூலம் பயன்பெறும் 1 கோடியே 14 இலட்சத்து 61 ஆயிரம் பெண்களின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கும் பணிகள் இன்று காலை முதலே தொடங்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் இன்று அவர்களின் வங்கி கணக்குகளில் ரூ.1000/- வரவு வைக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ‘சிந்துவெளி நாகரிகம்தான் திராவிடர் நாகரிகம்’ என

# நிரூபித்தவர்கள் வரலாற்று ஆசிரியர்கள் என்றால் - அதை நிலைநாட்டியவர் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின்!

## சட்டப் பேரவையில் அவை முன்னவர் அமைச்சர் துரைமுருகன் பெருமிதம்!

**சென்னை, ஜன.10**

**சிந்துவெளி நாகரிகம் திராவிடர்களின் நாகரிகம் என்று நிரூபித்தவர்கள் மார்ஷல் மற்றும் அர்னால்ட் டாயன்பீ போன்ற வரலாற்று ஆசிரியர்கள் என்றால் அதை நிலைநாட்டியவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று சட்டப்பேரவையில் அவை முன்னவர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பெருமிதம் பொங்கக் குறிப்பிட்டார்.**

அவை முன்னவர் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசியதாவது:-

ஒரு மகிழ்ச்சியை என்னுடைய உள்ளத்தில் ஏற்பட்டதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். பொதுவாக சிந்துவெளி நாகரிகத்தைப் பற்றி நாம் எல்லோரும் SSLC வரையிலே படித்தாலும் சரி, B.A. வரையிலும் படித்தாலும் சரி பாடப்புத்தகத்திலே ஒரு 2, 3 பகுதிகள் எழுதப்பட்டிருக்கும். அது மாணவனுக்கு சிந்துவெளி பற்றி ஒரு குறிப்பு எழுதுக என்று சொல்லுவார்கள். பத்து வரிக்கும் மிகாமல் எழுதுங்கள் என்று, அதோடு முடிந்துவிட்டது நாகரிகத்தின் வரலாறு.

ஆனால், சிந்துவெளி நாகரிகம் இருந்த ஒன்றுதான், நாம் இந்த நாட்டிற்கு சொந்தக்காரர்கள் என்பதை நிரூபிக்கின்ற ஆதாரம். கீழடி கிடைக்கிற வரையில் சிந்துவெளி நாகரிகம்தான் தலைசிறந்த நாகரிகம். அந்த நாகரிகம், திராவிடர் நாகரிகம்; தமிழர் நாகரிகம் என்று இருந்தது. Marshall அவர்கள்தான் அதை முதலில் கண்டுபிடித்தவர். வேறு எங்கேயோ படித்துவிட்டு வந்து அவருடைய செலவிலேயே ஆட்களை வைத்து குழி தோண்டியதையெல்லாம் பார்க்கிறபோது படாத பாடுபட்டிருக்கிறார். அவருடைய நூலைப் படித்தால் கண்களில் தண்ணீர் வந்துவிடும். எங்கேயோ இருப்பவர் இந்த நாட்டிற்கு நாகரிகத்தை கண்டுபிடிக்க வந்தவர். அதற்குப் பிறகு ஈராஸ் பாதிரியார் அவர்களோடு சேர்ந்து இந்த நாகரிகத்தின் பெருமையை வெளிக்காட்டினார்கள்.



ஆனால், குடத்துக்குள் இடப்பட்டதைப்போல, பள்ளி மாணவர்களோடு இருந்த அந்தச் செய்தி, வரலாறு இன்றைக்கு சட்டமன்றத்தில் பல நேரங்களிலே பேசப்படுவதாக, பல்வேறு அரங்கங்களிலே கருத்து தெரிவிப்பதாக, பொதுமக்கள் மத்தியிலே சிந்துவெளி நாகரிம் பற்றி வந்திருப்பது குறித்து நான் மகா மகிழ்ச்சியடைகிறேன். காரணம், Arnold Toynbee என்பவர் உலகத்திலே பெரிய வரலாற்று ஆசிரியர். அவர், ‘வரலாற்றை மறந்த மனிதன் நினைவிழந்த மனிதனுக்கு சமம்’ என்று சொன்னார்.

நாம் அதைப் பற்றி தெரியாத வரையில், இன்றைய வரையில் கூட பைத்தியக்காரனாகத்தான் இருக்கிறோம். ஆனால், அந்த வரலாற்றுக்கு புத்துயிர் கொடுத்து, இன்றைக்கு அதற்கொரு புதுமை உணர்ச்சியை தந்திருக்கிறவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்பதிலே எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

Marshallக்கும், ஈராஸ் பாதிரியாருக்கும் என்ன பெருமை இருக்கிறதோ, வருங்காலத்தில் இதை மாற்ற வேண்டுமென்று நினைக்கிறவர்களோடு எதிர் போராட்டம் நடத்துகிறோம்.

ஆனால், சிந்துவெளி நாகரிகம் திராவிடர்களுடைய நாகரிகம் என்பதை நிரூபித்தவர்கள் அவர்கள். அதை நிலைநாட்டியவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் என்ற பெருமை பின்னாலே வரும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் மட்டுமல்ல, இதில் எல்லோரும் ஈடுபட்டிருக்கிற காரணத்தால், எல்லோருக்கும் இது பொதுவான பெருமைக்குரியதுதான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு முறையும் அதைப் பற்றியெல்லாம் இன்னும் நிறைய பேசலாம். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இப்போது புது history எழுதச் சொல்லிவிட்டார்கள். புது historyல் 19 பேர் போட்டார்கள். 19 பேரும் அவர்கள்தான். 18 பேரையும் அவர்களைத்தான் போட்டார்கள். ஒருத்தர் கிடைக்கவில்லை. அதற்கான வேறு ஆள், கனடா நாட்டில் பிராமண சங்கத் தலைவராக ஒருவர் இருந்தார். கனடாவிலிருந்து அவரைக் கொண்டுவந்து, இந்தக் குழுவில் போட்டார்கள். ஆக, மொத்தம் 19 பேரும் இவர்கள்தான். அதனால்தான் சிந்துவெளி நாகரிகம், இந்து நாகரிகம், சரஸ்வதி நாகரிகம், இலட்சுமி நாகரிகம் என்று கொண்டு வருகிறார்கள்.

அதை ஆரம்பத்திலேயே நறுக்கி, இல்லை, இது அவ்வளவுதான் என்று நிலைநாட்டுவதற்கு அரசும், மக்களும் ஒன்றாக இருப்பதைப் பார்க்கிறபோது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. நான் வரலாற்றைப் படித்த மாணவன் அல்ல. நான் Economics படித்த மாணவன்.

ஆனால், வரலாற்றிலே interest உடையவன். இதே அவையிலே நான் உட்கார்ந்து கொண்டிருந்தபோது, ஒருநாள் புத்தகங்களை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தேன். எதிரிலே இருந்த அம்மையார் அவர்கள் முதலமைச்சர் என்ன புத்தகம் என்று கேட்டார்கள். History book என்று நான் சொன்னேன். “Are you a student of history?” என்று கேட்டார்கள். “No, I am a student of Economics” என்றேன். “Then, how come you are reading these?” என்றார்கள். “Out of my interest, I am doing this” என்றேன். “What book is that?” என்றார்கள். “Gutenberg” என்றேன். “Gutenberg? Too hard to study” என்றார்கள். அதற்குப் பிறகு paper news பார்த்தீர்களா என்று கேட்டார்கள். ஆகையினால், வரலாறு என்பது உணர்வுள்ள மனிதர்களுக்கெல்லாம் இருக்கப்பட வேண்டிய ஒன்று. அது வந்திருக்கிறது என்பதை நினைத்து முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டையும், இந்த அவையிலே பேசிய அத்தனைபேருக்கும் என்னுடைய வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உரையாற்றினார்.